DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 389/2019 DW : 2

Name : கஜேந்திரன் Age – 68

S/o : முருகப்பரெட்டி Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

Date: 16.03.2026

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) எனக்கு நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை வரவில்லை. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் எனக்கு தெரிந்த தகவலை தான் தாக்கல் செய்துள்ளேன். வாதி சந்துரு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ன பரிகாரம் என்பது எனக்கு தெரியாது. இட பிரச்சனை என்பது எனக்கு தெரியும். இந்த வழக்கில் வாதி ஈஸ்வரி மீது தாக்கல் செய்துள்ளார். தறபோது ஈஸ்வரி குடியிருக்கும் மனை சம்மந்தமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் வேறு சொத்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னை சாட்சி அளிக்க ஈஸ்வரி தான் அழைத்து வந்தார். ஈஸ்வரி குடியிருக்கும் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தற்போது ஞாபகமில்லை. எத்தனை சென்ட் குறித்து இந்தவழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியாது ஆனால் அவருக்கு 9 1/2 சென்ட் உள்ளது. ஈஸ்வரி குடியிருக்கும் இடத்தின் மேற்கு பக்கத்தில் என் மனையும் இல்லை. ஏழுமலை ரெட்டி பெயரில் அவருக்கு இன்னோரு மனை சொந்தமாக உள்ளது என்றால் சரியல்ல.

2) குப்புசாமிரெட்டி, ஏழுமலை ரெட்டி ஆகியோர் தெரியும். குப்புசாமிரெட்டியுடன் பிறந்தவர்கள், ஏழுமலைரெட்டி, பொன்னாம்மாள், என்றால் சரிதான். குப்புசாமிரெட்டியுடன் பிறந்த ஏழுமலைரெட்டி தான்

ஈஸ்வரியின் மாமனார் என்றால் சரிதான். நான் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் குப்புசாமிரெட்டி ஒரே ஒரு சகோதரர் ஏழுமலை ரெட்டி இருப்பதாகவும், அவர்களுக்குள் பாகம் பிரிக்கப்பட்டதாகவும் என்றால் சரிதான். குப்புசாமிரெட்டி சகோதரர் ஏழுமலைரெட்டிக்கு பாகம் இருப்பது போல் அவர்களுடைய இதர சகோதரர், சகோதரிகளுக்கு பாகம் உள்ளது போல் சொல்லியுள்ளது என்றால் சரியல்ல. 2001–ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை எனக்கு நேரடியாக தெரியும். அந்த பத்திரத்தை நான் பார்த்துள்ளேன் அந்த பத்திரத்தில் நான் சாட்சி கையுபத்து போட்டுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. 2001–ல் எந்த எந்த சொத்து சம்மந்தமாக பாகப்பிரிக்கப்பட்டது என சர்வே எண் விஸ்திரம் பற்றி தெரியாது. ஏகமனதாக பிரித்து கொண்டார்கள். எந்த எந்த சொத்து இந்த வழககில் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. சந்திரசேகர் வீடு ஈஸ்வரி வீட்டிற்கு தெற்கு உள்ளது. அந்த வீட்டில் ஒரு உற கிணறு உள்ளது. சந்திரசேகர் மற்றும் ஈஸ்வரி மனைகளுக்கு குல தெய்வம் உள்ளதா என்றால் இல்லை. சந்துருமனையில் தான் கோவில் உள்ளது. இந்த இரண்டு மனைக்கு நடுவே வேலி உள்ளது என்றால் சரிதான். சந்திரசேகர் மனைக்கு அவர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதில் UDR தவறுதலாக கொடுக்கப்பட்டது. அந்த விபரம் எனக்கு நன்கு தெரியும். சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பே பட்டா தவறுதலாக வழங்கப்பட்டது.

3) தவறுதலாக கொடுத்தது சம்மந்தமாக ஈஸ்வரி எந்தவித நடவடிக்கை எடுக்கவில்லை. அவருக்கு உதவி செய்ய யாரும் கிடையாது. ஏழுமலைக்கு சொந்தமான 7 சென்ட் மனையை ஈஸ்வரி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அந்த பட்டா எழுமலை பெயரில் உள்ளது. அதே போல் 41 சென்ட் நிலம் ஏழுமலை ரெட்டி பெயரில் உள்ளது என்றால் சரிதான். சந்திரசேகர் மற்றும் ஈஸ்வரி மனை சேர்த்தால் 18 1/2சென்ட் உள்ளது என்றால் சரிதான். அனுபவித்தின் பேரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். 18 ½ மனையும் குப்புசாமி ரெட்டிக்கு தான் சொந்தமானது என்றால் சரியல்ல. ஈஸ்வரி 20 ஆண்டுகளாக தற்போது குடியிருக்கும் இடத்திற்கு வந்துள்ளார் என்றாலும்

அதற்கு முன் அவர் வேறு இடததில் குடியிருந்தாா என்றால்  சரியல்ல. வாதிகள் அனுமதித்ததின் பேரில் தான் அவர்கள் குடியிருக்கிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்க்ல செய்த வீட்டு மனை ரசீதுகள் வேறு இடத்தை சார்ந்து என்றால் சரியல்ல. 2001–ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் முருகன் கையெழுத்து போடவில்லை ஏற்கனவே அவருக்கு இருந்த இடத்தை விற்றுவிட்டார். 2001–ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் குப்புசாமிரெட்டியின் 3 பிள்ளைகளும், 6ம் பிரதிவாதியின் கணவர் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அதில் குப்புசாமிரெட்டியின் இன்னோரு மகன் முருகன் கையெழுத்து போடவில்லை என்ால் சரிதான். அந்த பாகப்பிரிவினை குப்புசாமிரெட்டி பெயரில் உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான்.

4) 2001 ஆண்டில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் குப்புசாமிரெட்டியாரின் அனைத்து வாரிசுதாரர்கள் கையெழுத்து போடாததால் அந்த பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. முருகள் ஏற்கனவே விற்ற சர்வே எண் தெரியாது. 50 சென்ட் விஸ்தீரனம் சம்பத் என்பவருக்கு விற்றுவிட்டார். கூர் சீட்டு நான் பார்த்துள்ளேன். எந்த தேதிதியல் ஏற்பட்டது தெரியாது. அந்த கூர் சீட்டு யார் யார் இடையே ஏற்பட்டது என்பது தெரியும் எந்த எந்த சொத்திற்கு ஏற்பட்ட கூர் சீட்டிற்கு என்னுடைய முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. அது பதிவு செய்யப்படாத கூர் சீட்டு ஆகும். நான் அடிக்கடி நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன நபர் என்றாலும், நீதிமன்ற பரவல் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.